15.10.2022 அ.வ.எண்.290/2011

பி.வா.சா.1 , அருண் குமார்

வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1) எனது சொத்து சர்வே எண்.509ல் 1.48 ஏக்கர் விஸ்திரணம் கொண்டது. வாதியின் தாவா சொத்து எங்களது சொத்திற்கு வடக்கில் அமைந்துள்ளது. வழக்கில் எனது சார்பில் தாக்கல் செய்துள்ள கிரைய பத்திரங்களின் சான்றிட்ட நகல்களை நான் தான் மனு செய்து பெற்றேன். பி.வா.சா.ஆ2 , 3, 4 ஆகியவை டி.ஆயிரம் என்பவரால் மனு செய்யப்பட்டு வாங்கியதாக காணப்பட்டுள்ளது என்றால் அவர் தான் எங்களது சார்பாக பவர் மூலம் அவற்றை வாங்கினார். எனது எதிர்வாதுரை அல்லது முதல் விசாரணையில் மேற்படி பவர் பற்றி குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி டி.ஆயிரம் தொழில் நடத்தி வருகிறார் என்ன தொழில் நடத்தி வருகிறார் என்று எனக்கு தெரியாது. அவர் அரசயில் கட்சி ஒன்றில் பொறுப்பில் இருக்கும் விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் தற்போது வரை மேற்படி நபருடன் தொடர்பில் உள்ளேன். மேற்படி நபரின் ஒத்துழைப்புடன் வாதியின் தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்ய முயற்ச்சி செய்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

2) சர்வே எண் 509ல் எனது சொத்தை நான் விற்கவில்லை அதனை சுற்றி உள்ள எங்களது மற்ற நிலங்களை தான் விற்றுள்ளேன். சர்வே எண்.509/1A1B ஆகிய சொத்துகளை நான் விற்றுள்ளேன். மேற்படி சர்வே எண் வாதி சொத்திற்கு தெற்கில் அமைந்துள்ளது. அதில் எத்தனை மனைகளை விற்றுள்ளோம் என்று எனக்கு சரியாக தெரியாது. நான் எனது 16 சென்டு நிலத்தை மல்லிகா என்பவரிடம் இருந்து வாங்கினேன். 1ஆம் பிரதிவாதி சித்திரா 18 சென்டு நிலம் வாங்கினார். 3ஆம் பிரதிவாதி 16 சென்டு நிலம் வாங்கினார். நாங்கள் வாங்கும் போது எங்களது சொத்து நஞ்சை நிலமாக இருந்தது. மேற்படி எங்களது சொத்தை மனைகளாக பிரிப்பதற்கும் அதன் வகைப்பாட்டினை மாற்றுவதற்கும் அதனை விற்பனை செய்வதற்கும் உரிய அங்கிகாரம் பெற்றுள்ளோமா என்றால் அது டி.ஆயிரம் அவர்களுக்கு தான் தெரியும். எங்களது சொத்தை சென்டில் இருந்து சதுர அடிகளாக விற்பனை செய்துள்ளோமா என்றால் சென்டாகதான் விற்றோம் எத்தனை சென்டுகளை விற்றுள்ளோம் என்று எனக்கு தெரியாது.

3) எனது சொத்தை 12 மனைகளாக பிரித்து சதுர அடிகளாக விற்றுள்ளோம் என்றால் அது பற்றி

எனக்கு தெரியாது. ஒவ்வொரு கிரைய பத்திரம் எழுதப்பட்ட போதும் அதற்குண்டான கிரைய தொகையை நாங்கள் பெற்றுக்கொண்டோம். மனைகளாக எங்களது சொதததை பிரிக்கும் போது அரசாங்கத்திற்கு ஏதாவது பகுதியை தானமாக கொடுத்துள்ளோமா என்ற விவரம் எனக்கு தெரியாது, ஆனால் எங்களது மனைகளில் சாலை வசதி உள்ளது. எனது பெயரில் உள்ள வருவாய் ஆவணங்கள் எதுவும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. நானோ நான் விற்பனை செய்தவர்களோ வாதியின் தாவா சொத்தில் சுற்று சுவர் எழுப்ப முயற்ச்சி செய்கிறார்கள் என்று சொன்னால் சரியல்ல.

(கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடாச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)